முஸ்லிம் சமூகத்தின் ஐக்கியம் நல்லிணக்கம் என்பவற்றை வலியுறுத்தும்

ஆன்மீகத் தலைவர், அதிமேதகு ஆயதுல்லாஹ்
செய்யித் அலீ ஹுஸைனி காமெனெயீ அவர்களதும்

அதிமேதகு ஆயதுல்லாஹ் செய்யித் அலீ சீஸ்தானி அவர்களதும்

# ஃபத்வாக்கள்

*அகில இலங்கை அஹ்லுல்பைத் ஜமாஅத்*

*- கல்குடா கிளை -*



**<u>ஆன்மீகத் தலைவர், அதிமேதகு ஆயதுல்லாஹ்</u>**

**<u>செய்யித் அலீ ஹுஸைனி காமெனெயீ</u>**

அவர்களின் ஃபத்வா:

**கேள்வி:**

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால்...

தற்போதைய நிலையில் முஸ்லிம்களின் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தக் கூடிய தெளிவான, உறுதியான ஆதாரங்கள் இருப்பதை கருத்திற் கொண்டு, இஸ்லாத்தின் அடிப்படை விடயங்களை ஏற்றுக் கொண்ட அஹ்லுஸ் சுன்னாக்களின் நான்கு மத்ஹபுகள் உட்பட சைதிய்யா, ழாஹிரிய்யா, இபாழிய்யா மற்றும் இவை அல்லாதவை போன்ற இஸ்லாமிய இயக்கங்களுக்கு “இஸ்லாமிய உம்மத்” என்ற பெயரை வழங்குவது பற்றிய தங்களது கருத்து என்ன?, மேற்கூறிய இயக்கங்களுக்கு குஃப்ர் பட்டம்

சுமத்துதல் ஆகுமா? அல்லது இல்லையா? மற்றும் தற்காலத்தில் ஏனைய இயக்கங்களுக்கு கு∴ப்ர் பட்டம் சுமத்துவதற்கான வரையறையும், அளவீடும் என்ன?
இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் குறிப்பாக அஹ்லுல்பைத்தை பின்பற்றும் உலகிற்கு பணிபுரிவதற்கான நீண்ட ஆயுளை, மாண்புமிகு தங்களுக்கு அருளவென அல்லாஹு தஆலாவிடம் பிரார்த்திக்கிறோம்.

**ஆன்மீகத் தலைவருக்கான பணிமனையின் பதில்:**

இஸ்லாமிய இயக்கங்கள் அனைத்தும், இஸ்லாமிய உம்மத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படுவதோடு, அவை இஸ்லாத்தின் அனைத்து தகைமைகளையும் தம்மீது கொண்டுள்ளன. இஸ்லாமிய இயக்கங்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துதல், திருக்குர்ஆனின் போதனைகளுக்கும், நபி முஹம்மத் (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி) அவர்களின் சுன்னாவிற்கும் முரணாகும். மேலும், இது முஸ்லிம்களை பலவீனப்படுத்தி, இஸ்லாமிய எதிரிகளின் கைகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமைந்து விடும். இந்த வகையில் குறிப்பிடப்பட்ட இஸ்லாமிய இயக்கங்களுக்கு கு∴ப்ர் பட்டம் கட்டுதல் எந்த விதத்திலும் ஆகுமானதல்ல.

## <u>அஹ்லுஸ் சுன்னாக்களின் புனிதத்துவங்களை அவமதித்தல் ஹராம் என்பது பற்றிய ஆன்மீகத்தலைவரின் ஃபத்வா:</u>

இறைத்தூதர் (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி) அவர்களின் மனைவி உம்முல் மு∴மினீன் ஹஸரத் ஆயிஷா அவர்களை இழிவுபடுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தல் மற்றும் தூற்றுதல் தொடர்பில் தங்களது கருத்தை வெளியிடுமாறு கோரிய சஊதி அரேபியாவின் இஹ்ஸாப்

பகுதி ஷீஆ முக்கியஸ்தர்கள் மற்றும் அறிஞர்கள் சிலரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆன்மீகத் தலைவர் அவர்கள் பின்வருமாறு பதிலளித்துள்ளார்கள்:

இஸ்லாத்தின் தூதுவர் முஹம்மத் (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி) அவர்களின் மனைவியைத் தூற்றுவது உட்பட அஹ்லுஸ் சுன்னா சகோதரர்களின் புனிதத்துவங்களை இழிவுபடுத்துவது ஹராமாகும். இவ்விடயம் எல்லா நபிமார்களது மனைவியரையும், குறிப்பாக நபிமார்களின் தலைவர் ஹஸரத் முஹம்மத் (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி) அவர்களது மனைவியரைச் சாரும்.



**<u>பைத்துல்லாஹி ஹராம் ஹாஜிகளுக்கான</u>**
**<u>விஷேட தூதில் வழங்கப்பட்ட</u>**
**<u>ஆன்மீகத் தலைவரின் பரிந்துரை</u>**

இஸ்லாமிய உம்மத்தின் மீது அக்கறையுள்ளோர் மற்றும் இஸ்லாமிய அறிஞர்கள் பலரைப் போன்று நானும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்வதாவது:

முஸ்லிம்களுக்கு மத்தியில் முரண்பாடுகளை சூடுபிடிக்கச்

செய்யக்கூடிய, முஸ்லிம் அமைப்புக்களில் ஒவ்வொன்றினதும் புனிதத்துவங்களை இழிவுபடுத்துகின்ற அல்லது இஸ்லாமிய மத்ஹபுகளில் ஒன்றுக்கு கு.ஃப்ர் பட்டம் சுமத்துவதாக அமைகின்ற எந்தவொரு சொல்லும், செயலும் நிராகரிப்பையும் இணைவைப்பையும் கொண்டுள்ள கூட்டங்களுக்கு பணிவிடை புரிவதாகவும், இஸ்லாத்திற்கு மோசடி செய்வதாகவும் மற்றும் இது ஷரீஆவின் பார்வையில் ஹராமானதாகவும் உள்ளது.



**<u>ஈரானிய குர்திஸ்தான் மாநில</u>**
**<u>ஷீஆ-சுன்னா மக்கள் மத்தியில்</u>**
**<u>ஆன்மீகத் தலைவரின் உரை:</u>**

2010ம் ஆண்டு, ஈரானில் சுன்னி முஸ்லிம்கள் வாழுகின்ற குர்திஸ்தான் மாநிலத்திற்கு தாம் மேற்கொண்ட பயணத்தில் ஆன்மீகத் தலைவர் முஸ்லிம்களுக்கு இடையிலான ஒற்றுமையை வலியுறுத்தியும், இஸ்லாமிய மத்ஹபுகளின் புனிதத்துவங்களை இழிவுபடுத்துவதைக் கண்டித்தும் தாம் வழங்கிய பெறுமதியான உபதேசத்திலிருந்து…

சில வருடங்களுக்கு முன், குர்தி பிராந்தியத்தில் நன்னோக்குடைய ஆலிம் ஒருவர் ஜும்ஆ பிரசங்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: ‘‘அல்லாஹ்வின் மீது ஆணையாக, ஷீஆ ஒருவரிடம் வந்து சுன்னிகளுக்கு எதிரான விரோதத்தையும், குரோதத்தையும் அவரது உள்ளத்தில் ஏற்படுத்தி, அதேபோன்று சுன்னி ஒருவரிடம் சென்று ஷீஆக்களுக்கு எதிரான விரோத்தையும், குரோதத்தையும் அவரது உள்ளத்தில் தோற்றுவிப்போர்… இவர்கள், ஷீஆவுமில்லை, சுன்னியுமில்லை. ஷீஆவை விரும்புவதுமில்லை, சுன்னியை விரும்புவதுமில்லை. இவர்கள் இஸ்லாத்தின் விரோதிகளாவர். இருந்தும், இது அவர்களுக்குப் புரிவதில்லை. அவர்களுள் அதிகமானோர் விளங்கிக் கொள்கிறார்களில்லை. ஏன் விளங்கிக் கொள்கிறார்களில்லை என்பதே கைசேதப்படுவதற்கான காரணியாகும்’’.

இன்று, இந்த வஹ்ஹாபிய ஜமாஅத்தினர் ஷீஆக்களை கா.ஃ.பிர் என்கின்றனர். அஹ்லுல்பைத்தினரை நேசிக்கின்ற சுன்னிகளையும் கா.ஃ.பிர் என்கின்றனர். சூ.ஃ.பிஸ, காதிரியா தரீக்காக்களைப் பின்பற்றும் சுன்னிகளை கா.ஃ.பிர் என்கின்றனர். இப்பிழையான சிந்தனை எங்கிருந்து வெளிப்பட்டதோ? இத்தகையோரின் பார்வையில், அஹ்லுல் பைத்தினரை நேசிக்கின்ற, அவர்களின் மீது அன்பு செலுத்துகின்ற உலகம் வாழ் அனைத்து ஷீஆக்களும், வடஆபிரிக்கா ஷா.ஃ.பிஈ சுன்னி மக்களும், மத்திய ஆபிரிக்கா நாடுகளில் வசிக்கும் மாலிகீ மத்ஹபினரும் கா.ஃ.பிர்களாவர் என்பது ஏன்?. கெய்ரோவிலுள்ள இமாம் ஹுஸைன் பின் அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மர்கத்திற்கு மரியாதை செய்கிறார்கள் என்பதற்காகவா? ர.ஃ.ஸூல் ஹுஸைன் மஸ்ஜிதை புனிதமாகக் கருதுகிறார்கள் என்பதற்காகவா?. இந்த வகையில்தான் இவர்கள் கா.ஃ.பிர்கள் என்பது

வியக்கத்தக்கது. சக்கஸீ, சனன்தஜீ மற்றும் முரீவானீ முதலிய சுன்னிகளும் காதிரியா அல்லது நக்ஷபந்தியா தரீக்காக்களுடன் தொடபுற்றிருந்தால் அவர்களும் கா.ஃ.பிர்கள்தான் என்பதும் வியக்கத்தக்கதே. இச்சிந்தனை, எப்படியான சிந்தனை? ஏன் இப்பிழையான, தீய சிந்தனையினூடாக முஸ்லிம் சகோதரர்களுக்கு மத்தியில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறார்கள்? ஷீஆக்களில் சிலருங்கூட அறியாமையின் காரணமாக அல்லது பிரிவினைகளைத் தோற்றுவிக்கும் நோக்கத்திற்காக அஹ்லுல் சுன்னாக்களின் புனிதத்துவங்களை இழிவுபடுத்துகிறார்கள்.

இவைதொடர்பில் நான் தெரிவித்துக் கொள்வதாவது: இரு குழுக்களின் இச்செயலானது, ஷரீஆ ரீதியில் ஹராமானதும், ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு எதிரானதுமாகும்.

(2009.05.13)



## குர்திஸ்தான் மாநிலத்தில் ஷீஆ - சுன்னா அறிஞர்களுடனான சந்திப்பில் ஆன்மீகத் தலைவரின் உரை

எங்களில் சிலர், எங்களது நண்பர்களுக்கு தீயை மூட்டுகிறோம், எதிரிக்கு தீயை மூட்டுவதாக நினைத்துக் கொள்கிறோம். மத்ஹபுகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தோற்றுவித்தலானது, நாங்கள் எங்களுக்குள் முரண்பட்டுக் கொள்வதற்கான எதிரிகளின் திட்டம் என்பதை எங்களில் பலர் மறந்து விடுகிறோம். ஷீஆ ஒருவரின் முழுமுயற்சியானது, சுன்னிகளை வீழ்த்துவதாகவும், சுன்னி ஒருவரின் முழுமுயற்சியானது, ஷீஆக்களை வீழ்த்துவதாகவும் அமைந்துள்ளது. ஆம், இது மிகவும் கைசேதப்படத்தக்கதாக உள்ளதோடு, எதிரியும் இதனையே வேண்டுகிறான்.

பலஸ்தீனுக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் எந்தவொரு நாடோ, எந்தவொரு அரசோ ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உச்சத்தை எட்டவில்லை. இதனை அனைத்துலகும் மெய்ப்படுதியுள்ளது. இருந்தும், அரேபிய நாடுகளில் சில,

வேதனையினால் தங்கள் கூக்குரலை எழுப்பி, ஈரான் தனது இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முயற்சிக்கிறது என்று கூறின. ஆனால், பலஸ்தீனர்கள் இவ்வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. குறிப்பாக, காஸா போர் மற்றும் 23நாள் யுத்தம் முதலானவற்றில் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அதன் எல்லாத் தரப்பிலிருந்தும் ஆன்மீகத் தலைவர், ஜனாதிபதி, அரசியல் அதிகாரிகள், மக்கள், பணம் உதவி மற்றும் இவைபோன்ற எல்லாமும் அநீதியிழைக்கப்பட்ட பலஸ்தீன இஸ்லாமிய சகோரர்களுக்கு பணிவிடை புரிவதில் அமையப் பெற்றன.

இவ்வார்த்தைகளின் தொடரில் வைரஸ் பெருகுவதை ஒருமுறை கண்டோம். இவர்கள், தொடர்ச்சியாக சில பெரியோரிடம், சில அறிஞர்களிடம், சில கண்ணியமிக்கோரிடம் சென்று, ஜனாப்…! நீங்கள் யாருக்கு உதவிக் கொண்டிருக்கிறீர்கள்? காஸா மக்கள் நாஸிபி ஆவார்கள்…!. நாஸிபி என்றால் அஹ்லுல்பைத் விரோதியாகும். இது தொடர்பில், குறிப்பிட்ட சிலரும் நம்பினர்…!. இவர்கள் நாஸிபி என்று கூறுகிறார்கள் என்ற செய்தியை எம்மிடம் கொண்டு வந்தனர். நாம் கூறினோம்: “தவக்கல்து அலல்லாஹ், இழிவான சபிக்கப்பட்ட ஷைத்தானின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும். காஸாவில் அல்-இமாம் அமீருல் மு.ஃமினீன் அலீ இப்னு அபீதாலிப் எனும் பெயரில் மஸ்ஜித் உள்ளது. அல்-இமாம் அல்-ஹுஸைன் எனும் பெயரில் மஸ்ஜித் உள்ளது. இந்நிலையில் எவ்வாறு இவர்கள் நாஸிபியாக இருக்க முடியும்”. ஆம், இம்மக்கள் சுன்னிகளாவர். ஆனால், நாஸிபிகளில்லை. இவ்வாறு கதையாடினர், இவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர், இவ்வாறு செயற்பட்டனர். இதற்கு மாற்றமாகவும் சில நடந்துள்ளன.

குறிப்பிட்ட சிலர், எழுந்து கும் நகருக்குச் சென்று ஷீஆ நூற்களை பார்த்துவிட்டு, ஜனாப்…! பாருங்கள் இவைகள் ஷீஆ நூற்கள் என்கின்றனர். அல்லது, முட்டாளான, அலட்சியக்காரனான, சுயநோக்கையுடைய ஒரு பேச்சாளன், மிம்பரில் நின்றுகொண்டு அஹ்லுஸ் சுன்னாக்களின் புனிதத்துவங்கள் தொடர்பில் மூடலான, கெட்ட வார்த்தையை உபயோகிக்கையில், அதனை பதிவுசெய்துகொண்டு, இறுவட்டுகளாக மாற்றி, அதனை அங்குமிங்குமாக பரப்பிவிட்டு, ஜனாப்…! பாருங்கள், இவர் ஒரு ஷீஆ என்கிறார்கள். இது தொடர்பில் அவரிலும், அவர் தொடர்பில் இதனிலும் தீய அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றனர். இதன் பொருள் என்ன?.

திருக்குர்ஆனில் வந்துள்ள அல்லாஹ்வின் கூற்றான “உங்களது வர்ணம் நீங்கிவிடுகிறது” என்றால், முரண்பாடு எழும்போது, பிரிவினை தோன்றும்போது, தங்களுக்கிடையில் தப்பான அபிப்பிராயம் உருவாகும் போது, ஒருவரை ஒருவர் துரோகியாக நோக்கும்போது நாங்கள் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்போடு நடந்துகொள்ள மாட்டோம் என்பது இயல்புதான். அப்படி, ஒத்துழைப்போடு நடந்து கொண்டாலும், சினேக பூர்வமானோராக நாமிருக்க மாட்டோம். இவைகள்தான் எதிரிகள் வேண்டிக் கொண்டிருப்பவை. ஒரு ஷீஆ அறிஞரும் சரி, ஒரு சுன்னி அறிஞரும் சரி, இதனை அவசியம் விளங்கிக் கொள்ளல் வேண்டும். இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இஸ்லாத்தின் அடிப்படை விடயங்களில் சிலவற்றிலும், அதன் உபரியான விடயங்களில் சிலவற்றிலும் இரு மத்ஹபுகள் முரண்படுதல் இயல்பானதே. இருந்தும் அனேக விடயங்களில் அவை ஒன்றிணைகின்றன. ஆனால், இது பகைமை எனும் பொருளில் இல்லை. குறிப்பிட்ட சில விடயங்களில் ஷீஆ அறிஞர்களின் ∴பத்வாக்களும் 180 பாகையளவு ஒன்றோடு

ஒன்று முரண்படுகின்றன. அனேக விடயங்களில் அஹ்லுஸ் சுன்னா (மத்ஹபுகளுடைய) இமாம்களின் ஃபத்வாக்கள் ஒன்றோடு ஒன்று வித்தியாசப்படுகின்றன. இருந்தும், முரண்பாடுகள் இருக்கும் போது, மனிதர்கள் ஒருவரையொருவர் இழிந்துரைத்து, தூசிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மிகவும் நல்லது, அவருடைய மத்ஹபு இதுவாகவும், இவருடைய மத்ஹபு அதுவாகவும் இருக்கட்டும்... நபி (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி)அவர்களுடைய குடும்பத்தினர் ஷீஆக்களுக்கு மட்டும் உரியோர் என்று யாரும் கருதிவிடக் கூடாது. அவ்வாறில்லை, அவர்கள் இஸ்லாமிய உலகிலுள்ள அனைவருக்கும் சொந்தமானோர் ஆவர். பாத்திமா ஸஹ்றா (அலைஹா அஸ்ஸலாம்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் யார் இருக்க முடியும். சுவனத்து வாலிபர்களின் தலைவர்களான இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் (அலைஹிமா அஸ்ஸலாம்) ஆகியோரை ஏற்றுக் கொள்ளாது யார் இருக்க முடியும்? இருந்தும், ஒருவர், அவர்களை இமாம்கள் என்றும், எங்களால் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியோர் என்றும் நம்புகிறார். மற்றொருவர் நம்புவதில்லை. இருந்தும் அவர்களை ஏற்றுக் கொள்கின்றனர். இவைதான் யதார்த்தங்களாக உள்ளன. அவசியம் இவற்றை விளங்கிக் கொள்ளல் வேண்டும். அவசியம் இவற்றை வலுப்படுத்தல் வேண்டும். இருந்தும், சிலர் இதனை விளங்கிக் கொள்ளாது, தாம் சரியான வேலையைதான் செய்வதாகக் கருதிய நிலையில் எதிரிகளின் தூண்டுதலால் நகர்த்தப்படுகின்றனர்.

قُلْ هَلْ نُنَبِّئُكُمْ بِالْأَخْسَرِينَ أَعْمَالًا * الَّذِينَ ضَلَّ سَعْيُهُمْ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَهُمْ يَحْسَبُونَ أَنَّهُمْ يُحْسِنُونَ صُنْعًا

“(தம்) செயல்களில் மிகப் பெரும் நஷ்டவாளிகள் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?” என்று

(நபியே!) நீர் கேட்பீராக. யாருடைய முயற்சி இவ்வுலக வாழ்வில் பயனற்றுப் போயிருக்க, தாங்கள் மெய்யாகவே அழகான காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள்தான்.

எதிரிகளுக்குக்காக செயற்படுகிறார்கள் என்பதை மறந்து தாம் நற்காரியம் புரிவதாக நினைக்கின்றனர். இது நமது காலத்தின் தன்மையாகவுள்ளது.



**<u>அதிமேதகு ஆயதுல்லாஹ்</u>**
**<u>செய்யித் அலீ சீஸ்தானி</u>**
அவர்களின் ஃபத்வா:

**கேள்வி:**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு பின்வரும் முக்கிய இரு விடயங்கள் தொடர்பில் மில்லியன் கணக்கான முஸ்லிம்களுக்கு வழிகாட்டுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

ஷஹாதா கலிமாவை மொழிந்த, கிப்லாவை நோக்கி தொழுகின்ற, (ஹனஃபி, ஷாஃபிஈ, மாலிகீ, ஹன்பலீ, ஜஃ'பரீ, சைதி, இபாழீ மற்றும் ழாஹிரீ முதலிய) எட்டு மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்றுகின்ற ஒவ்வொருவரும் முஸ்லிமாகக் கருதப்படுவார்களா? அவர்களது உயிர், மானம் மற்றும் சொத்து ஆகியன மதிக்கப்பட வேண்டியவையா?

## ஃபத்வா:

பிஸ்மிஹி தஆலா

**பதில் 01:** ஷஹாதா கலிமாவை மொழிந்து, அதற்கு முரணான வார்த்தையை வெளியிடாத, அதேபோன்று நபி முஹம்மத் (ஸல்லல்லாஹ் அலைஹி வஆலிஹி)அவர்களது அஹ்லுல்பைத் (அலைஹிமுஸ் ஸலாம்)அவர்களோடு பகைமை கொள்ளாத ஒவ்வொருவரும் முஸ்லிமாகக் கருதப்படுவர்.

**பதில் 02:** ஷீஆக்களின் பார்வையில் அஹ்லுஸ் சுன்னாக்கள் முஸ்லிமாக கருதப்படுகிறார்கள். இஸ்லாமிய அனைத்துச் சட்டங்களும் அவர்கள் விடயத்தில் நடைமுறைப் படுத்தப்படும். அவர்களுடனான திருமணம் ஆகுமானதாக உள்ளது. ஷீஆக்கள் அவர்களிடமிருந்து வாரிசுரிமை பெறுவதுபோன்று, ஷீஆக்களிடமிருந்து அவர்கள் வாரிசுரிமை பெறுவார்கள்; கவாரிஜ் மற்றும் நாஸிப் முதலானோரைத் தவிர. அஹ்லுஸ் ஸுன்னாக்கள் அனைவரினதும் உயிர், சொத்து மற்றும் மானம் முதலியன மதிக்கப்பட வேண்டியவை.

பத்ர் மற்றும் பைஅத்துல் ரிழ்வானை உடைய ஸஹாபாக்கள், முஹாஜிர் மற்றும் அன்சாரிகளான முஃமின்கள், இஸ்லாமிய மத்ஹபுகளின் இமாம்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுவோர் முதலிய அனைவரையும் ஷீஆக்கள் காஃபிர்கள் எனக் குறிப்பிடுகிறார்கள் என்ற கூற்று, வெறும் பொய்யானதே ஆகும்.

வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி

-

## ஹஸரத் ஆயதுல்லாஹ் சீஸ்தானி அவர்களது பணிமனை விடுத்த அறிக்கையிலிருந்து

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا ۚ

இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்.

இன்றைய இஸ்லாமிய உலகு கடின மற்றும் சிக்கலான சூழலை அனுபவிக்கிறது. பெரும் வீழ்ச்சிகளையும், பெரும் சவால்களையும் எதிர்கொள்கிறது. தன் விதியின் பிடிக்குள் இஸ்லாமிய உம்மத்தின் நிகழ்கால மற்றும் எதிர்காலத்தை அமைத்து விட்ட வீழ்ச்சிகள் இவை. இப்படியான காரணிகள் இருக்கின்ற நிலையில், பிரிவினையின் தோற்றுவிப்பு, மத்ஹபு முரண்பாடுகள் மற்றும் சாதிய, வர்க்க மோதல்கள் ஆகியவற்றைத் தடுத்து, ஐக்கியத்தைப் பேணுவதற்கான இஸ்லாமிய உலகினுடைய தேவையின் முக்கியத்துவத்தை எல்லா முஸ்லிம்களும் உணர்கின்றனர். அதிலிருந்து தொடர்ச்சியாக பல நூற்றாண்டுகள் கடக்கின்ற முரண்பாடுகள், இதற்கான எவ்வித முழுத் தீர்வும் இதுவரையில் சிந்திக்கப்படவில்லை.

இந்த வகையில் பெறுமதிமிக்க, உறுதியான அறிவுபூர்வ ஆய்வுகளின் வரையறைக்கு வெளியில் இம்முரண்பாடுகளின் சுவாலைக்கு முற்றுப் புள்ளியிடுவது பொருத்தமற்றதாகும். இம்முரண்பாடுகள் எந்த வகையிலும் சமய அடிப்படைகளில், இஸ்லாமிய அகீதா அம்சங்களில் உள்ளடங்கா என்பது குறிப்பிடத்தக்கது. எல்லா முஸ்லிம்களும் ஏகஇறைவனை, இஸ்லாத்தின் சங்கைமிகுத் தூதுவர் முஹம்மத் முஸ்த.ஃபா

(ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி) அவர்களின் தூதுத்துவத்தை, மறுமையை, ஷரீஆ சட்டங்களுக்கான அடிப்படை இரு மூலாதாரங்கள் என்ற வகையில் மாற்றத்திற்கு உள்ளாகுவதிலிருந்தும் அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்ட திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி) அவர்களின் பெறுமதிமிக்க சுன்னா, அதேபோன்று பரிசுத்த அஹ்லுல் பைத்தினரை நேசித்தல் முதலானவற்றை விசுவாசிக்கின்றனர். மேலும், எல்லா முஸ்லிம்களுக்கும் மத்தியில் காணப்படுகின்ற, இஸ்லாமிய சமயத்தின் அடிப்படைகளாகக் கருதப்படுகின்ற வேறு பொது அம்சங்களாக தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் இவை போன்றவற்றைச் சுட்டிக் காட்ட முடியும்.

இப்பொதுவம்சங்கள், முஸ்லிம்களின் ஐக்கியத்திற்கு உருக்கொடுப்பனவாகவும், பலமிகு அடிக்கற்களாகவும் அமைகின்றன. எவ்வித சந்தேகமுமின்றி, முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்பின், சினேகிதத்தின் பிணைப்புகளை வலுப்படுத்தும் வரை இப்பொதுவம்சங்களை மையப்படுத்தல் வேண்டும். அல்லது, குறைந்தது ஒருவருக்கொருவர் மரியாதையைப் பகிர்ந்து கொள்ளல், மத்ஹபு இன சாதிய பிணக்குகள் மற்றும் பகைமைகள் ஆகியவற்றை விட்டும் விலகிக் கொள்ளல் என்பனவற்றின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தோடு ஒத்துறவாடுவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

இக்காரணத்தின் அடிப்படையில், தெளிவான இஸ்லாமிய சன்மார்க்கத்தின் கொடியை மேலோங்கச் செய்வதற்காகவும், முஸ்லிங்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காகவும் இதயத்துடிப்பைக் கொண்ட எல்லா மக்களும், ஒருபுறம் முஸ்லிம்களுக்கு இடையிலான பிளவும், இடைவெளியும் அதிகரிப்பதை தடுக்கும் விதத்திலும், மறுபுறம் எதிரிகளின் தீய நோக்கங்கள் இயல்பெறுவதற்கான களத்தை அமைத்துக் கொடுக்காத வகையிலும் முஸ்லிம்கள்

ஒருவரை ஒருவர் நெருங்கவும், அரசியல் மோதல்களால் எழுந்த பதற்றத்தைக் குறைக்கவும் தனது முழு முயற்சியையும் பிரயோகிக்கட்டும்.

இந்த எதிரிகள், இஸ்லாமிய நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும், அந்நாடுகளுக்கு அல்லாஹ் அருளியுள்ள செல்வங்களை அபகரிக்கவும் தருணங்காத்து வருகின்றனர். சில மனிதர்களும், சில நிகழ்வுகளும் முற்றாக மேற்கூறப்பட்டதற்கு மாற்றமாகவே நடப்பதை உச்சகட்ட கைசேதத்துடன் பார்க்கக் கூடியதாக உள்ளது. முஸ்லிம்களுக்கு இடையில் பிரிவினையைத் தோற்றுவித்தல், மத்ஹபு மற்றும் சாதிய முரண்பாடுகளின் வெடிப்பை ஆழப்படுத்தல் எனும் வகையிலேயே அவர்களின் முயற்சிகள் அமைந்துள்ளன. இந்நபர்கள், கடந்த ஆண்டுகளாக, மத்திய கிழக்காசியப் பிராந்தியத்தில் அரசியல் மோதல்கள் சூடுபிடித்து, ஆதிக்க சக்திகளின் தலைமீதான பிணக்குகள் மேலோங்கியதன் பின், தங்களின் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்தனர்.

அவர்கள், தம் இழிவான நோக்கங்களை அடைந்து கொள்ளும் வரை மத்ஹபு முரண்பாடுகளை பெரிதுபடுத்தி, விரிவுபடுத்துவதை தமது செயற்திட்டத்தின் அடிப்படையாக ஆக்கிக் கொண்டு, குற்றம் சுமத்தல், சேதப்படுத்தல் முதலான வழிகளைப் பயன்படுத்தி இம்முரண்பாடுகளை சூடுபிடிக்கச் செய்கின்றனர்.

குறித்த ஒரு மத்ஹபை இழிவுபடுத்தி, அதன் நிறத்தைப் போக்குதல், தமது அடிப்படை உரிமைகளிலிருந்து அம்மத்ஹபுடைய ஆதரவாளர்களைத் தடுத்தல், ஏனைய முஸ்லிம்களின் உள்ளத்தில் அம்மத்ஹபு பற்றிய வெறுப்பையும், அச்சத்தையும் தோற்றுவித்தல் என்பன இவர்களது நோக்கங்களில் மிகக்குறைந்தவையாக உள்ளன.

இத்தீய திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில்,

தொலைக்காட்சிச் செய்மதிகள், இணையத் தளங்கள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் முதலியவை உட்பட சில ஊடகங்கள், சில சமயங்களில் புத்திக்கு அப்பாற்பட்ட, ஆச்சரியமான ஃபத்வாக்களை வெளியிட்டு, அவற்றில் இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் மத்ஹபுகள் சிலவற்றை இழிவுபடுத்துகின்றனர். பின்னர், குறித்த நோக்கங்களை அடைந்துகொள்ளவும், “மர்ஜயிய்யதுத்தீன்” என்பதின் உயர் அந்தஸ்தை இழிவுபடுத்தவும் மற்றும் மத்ஹபு முரண்பாடுகளுக்கு வழிவகுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, இப்படியான பத்வாக்களை ஹஸரத் ஆயதுல்லாஹ் சீஸ்தானி அவர்களோடு தொடர்புபடுத்தி, அவரின் பெயரில் புனைந்து விடுகின்றனர்.

இதனால், ஹஸரத் அதிமேதகு ஆயதுல்லாஹ் சீஸ்தானி அவர்களின் ஃபத்வாக்களின் மூலங்களாக, அவர்களுடைய ஒப்பமும், முத்திரையும் இடப்பட்ட நம்பத்தகுந்த நூற்களே அமையும் என்பதை தெரிவிக்கிறோம். இந்த ஃபத்வாக்கள் எந்தவொன்றிலும் ஏனைய இஸ்லாமிய இயக்கங்கள், மத்ஹபுகள் முதலியவற்றை சிறிதளவேனும் அவமதிக்கவோ அல்லது இழிவுபடுத்தவோ இல்லை. எனவே, இந்த ஃபத்வாக்களுடன் குறைந்தளவேனும் அறிமுகத்தை உடையோர், பிழையாக வெளியிடப்படுபவை போலியானவை என்பதை நன்கறிந்து கொள்வார்கள்.

அத்தோடு, கடந்த வருடங்களில் ஆயதுல்லாஹ் அவர்களுடைய உரைகள், குறிப்பாக பல வருட காலமாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி காயமுற்ற ஈராக்கிய மக்களின் துயர் மற்றும் நெருக்கடி பற்றியதாகவே அமைந்திருந்தன. அதேபோன்று, இப்பரிந்துரைகள் அஹ்லுஸ் சுன்னா சகோதரர்களோடு நட்பாகவும், மரியாதையோடும் நடந்து கொள்வதற்காக தமது ஆதரவாளர்கள் மற்றும் முகல்லிதுகளுக்கு வழங்கிய பணிப்புரைகளை உள்ளடக்கியிருந்தன. ஷீஆ மற்றும் சுன்னி உட்பட அனைத்து முஸ்லிம்களுடைய மானம், உயிர் மற்றும்

சொத்து என்பன பாதுகாக்கப்படல் வேண்டும் என்பது குறித்து பலதடவைகள் தமது உரைகளில் வலியுறுத்தி வந்துள்ளார்கள். இஸ்லாம் தடுத்த முறையில் இரத்தத்தை பூமியில் சிந்த வைத்த எந்தவொருவரோடும் தமது தொடர்பை துண்டித்திருந்தார்கள்.

இங்கே எம்மால் குறிப்பிடப்பட்டவை, ஏனைய மத்ஹபுகளுடைய ஆதரவாளர்களோடு நடந்து கொள்வதில் சமய அதிகாரம் பெற்ற ஒரு முஜ்தஹிதுடைய நடைமுறை வாழ்வையும், இவ்விடயத்தில் ஆயதுல்லாஹ் அவர்களுடைய பார்வையையும் நன்கு தெளிவு படுத்துகின்றன.

எல்லா முஸ்லிம்களும், தமது முரண்பாட் டாளரோடு இவ்வாறான நடைமுறை வாழ்வையும், அணுகு முறையையும் கொண்டிருப்பார்களானால், குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் கற்பிணிகள் முதலியோருக்குக் கூட கருணை காட்டாத கண்மூடித்தனமான வன்முறைகளையோ, கொடூரமான கொலைகளையோ இனி நாம் சந்திக்க மாட்டோம். யா ரப்பே...! இக்கொலைகள் அனைத்தையும் விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.

இஸ்லாமிய உம்மத்தின் சீராக்கத்திற்கும், நலவிற்கும் அனைவரையும் வழிகாட்ட வேண்டும் என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் பிரார்த்திக்கிறோம். அவன் எல்லாக் காரியத்தின் மீதும் வல்லமை உடையோனாக இருக்கிறான்.
உசூலுத்தீன்

وتذهب ريحكم(08:46).

.சூறா அல்க.்.ப்,வசனம் 103

.நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பரிசுத்த குடும்பத்தினரான அஹ்லுல்பைத் எனப்படுவோர் மீது அன்பு செலுத்துமாறு அல்லாஹுஃ தஆலா திருக்குர்ஆனில் (42:23) மு.ஃ.மின்களுக்கு கட்டளையிட்டுள்ளமையும்,அதேபோன்று,அவர்களோடு பகைமைகொள்வது அல்லாஹ் மற்றும் திருத்தூதர் (ஸல்) அவர்களோடு பகைமை கொள்வதாகும் என ஹதீஸுஃகளின் வாயிலாக வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பரிசுத்த அஹ்லுல்பைத்தினரைப் பகைப்போர் நாஸிப் எனப்படுவர்.

.சூறா ஆலஇம்றான்,வசனம் 103

.மார்க்க ஞானங்களில் புலமையற்றோர்,தங்களது மார்க்க விவகாரங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் சமய அதிகாரம் பெற்ற முஜ்தஹிதுகளை நாடவேண்டியது கட்டாயமாகும். இவ்வாறு,முஜ்தஹிதுகளுக்கு வழங்கப்பட்ட சமய அதிகாரம் மர்ஜயிய்யதுத்தீன் எனப்படும்.

.மார்க்க அதிகாரம் பெற்ற முஜ்தஹிதுகளை பின்பற்றவேண்டியவர் ‘முகல்லித்’ ((مقلدஎனப்படுவார்.